எம்.சி.ஓ.பி எண்: 1772 /2021 தேதி: 10.08.2026

மசா. : 3

பெயர் : கார்த்திக்

த/பெ. : ராம்மூர்த்தி

வயது : 41

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**முதல் விசராணை**</u>

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 15 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

<u>**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கவரவில்லை.விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தை பார்த்ததற்கும் சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதற்கும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. மசாஆ 14 ல் குற்ற இறுதி அறிக்கையில் என் பெயர் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப் படவில்லை. விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. கேடிஎம் வாகன ஓட்டுநர்தான் 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதினார் என்றால் நான் பார்த்த போது இருசக்கரவாகனங்களும் மோதிக்கொண்டது. இந்த வழக்கில் எனக்கு முன்பு சம்பவத்தை நேரில் பார்த்த நபர் ஒருவர் சாட்சி அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் கேடிஎம் வாகனம் TN–18–BC–5154 இருசக்கரவாகனத்தின் மீதுதான் தவறு என்று கூறியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த சாட்சியத்தை உடைக்கும்பொருட்டு மனுதார் கேட்டுக்கொண்டதன் பெயரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் நான் இல்லை என்றாலும் கேடிஎம் வாகனத்தின் மீதுதான் தவறு என்று சொன்னால் சரியல்ல. டியோ வாகனத்தின் மீதுதான் தவறு. யார் பெயரில் தவறு என்று எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டு தற்பொழுது அதை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக இருப்பதால் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல எ்னறால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.